பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 11 ஞாயிற்றுக்கிழமை (23-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 88

★ பாரிஸ் மாநாட்டில் நிதி உதவி கிடைத்ததால்

# தமிழகத்தில் இருந்து அகதிகளை அழைப்பதில் ஆர்வம் குறைகிறது

## நிவாரணம் ரூ. 250 ஆகக் குறைப்பு

சென்னை, பெப்ரவரி 23

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை, திரும்ப அழைப்பதில் வெகு அவசரமும் அக்கறையும் காட்டி வந்த ஸ்ரீலங்கா அரசு, இப்போது தனது ஆர்வத்தைக் குறைத்துள்ளது.

அகதிகளைத் திரும்ப அழைப்பதற்கு இந்தியாவுடன் செய்து கொண்ட ஏற்பாட்டின் பிரகாரம், தாயகம் திரும்பும் அகதிகளுக்கு உடனடி நிவாரணப் பணமாக வழங்க ஒப்புக்கொண்ட இரண்டாயிரம் ரூபாவை, இருநூற்றைம்பது ரூபாவாகவும் ஸ்ரீலங்கா அரசு குறைத்துக் கொண்டு விட்டது.

ஸ்ரீலங்கா சென்றடையும் அகதிகளின் பாதுகாப்பும் உறுதியானதாக இல்லை. அவர்கள் கொண்டு சென்ற உடைமைகள் அரசாங்கத்துக்குச் சார்பான தமிழ்க் குழுக்களால் பறித்தெடுக்கப்பட்டதாகயும் இங்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

ஏற்கனவே திருகோணமலை சென்றடைந்தவர்கள் நிவாரணம் குறைப்பு, பாதுகாப்பின்மை என்பன குறித்து இங்குள்ளவர்களுக்குத் தகவல் அனுப்பி உள்ளதால், முன்னர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மன்னாருக்கு முதல் தொகுதி அகதிகள் வந்து சேர்ந்தனர்

கொழும்பு, பெப். 23

தமிழகத்திலிருந்து மன்னாருக்கு முதல் தொகுதி அகதிகள் நேற்றுக் காலை வந்து சேர்ந்தனர்.

129 குடும்பங்களைச் சேர்ந்த 511 பேரே நேற்று மன்னார் வந்து சேர்ந்தனர்.

ஏற்கனவே சென்னையிலிருந்து ஐந்து தொகுதிகளில் அகதிகள் திருகோணமலை வந்து சேர்ந்தனர் என்பது தெரிந்ததே.

நேற்று இராமேஸ்வரத்திலிருந்து மன்னாருக்கு முதல் தடவையாக 'இராமானுஜம்' கப்பல் மூலம் அகதிகள் புறப்பட்டனர். அவர்கள் நேற்று சில மணி நேரத்தில் தலைமன்னார் துறையை வந்தடைந்தனர்.

அங்கு அவர்களை புனர்நிர்மான, புனர்வாழ்வு, சமூகநலத் துறை அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ. மன்னார் அரச அதிபர் கே. கணேஷ் ஆகியோர் வரவேற்றனர். [உ-த]

## மூதூரில் 5 தமிழ் மக்கள் படையினரின் சூட்டுக்கு பலி!

யாழ்ப்பாணம், பெப். 23

திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் ஐந்து தமிழ் மக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும், இரு பெண்கள் உட்பட 6பேர் கைதுசெய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 14 ஆம் திகதி மூதூரில் இறால்புளி என்னும் இடத்தில் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டின் போதே பிரஸ்தாப ஐந்து பேரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கிண்ணியா உப்பாறைச் சேர்ந்த நல்லையா இன்பராஜா, செல்லையா பாக்கியராஜா, லோகேஸ்வரன், கனகரத்தினம் ராஜன் இறால் புளியைச் சேர்ந்த தம்பிராசா சத்தியசீலன் ஆகியோரே கொலையுண்ட ஐவரும் ஆவர்.

வேலுப்பிள்ளை மோகன், தம்பிராசா சிவா ஆகியோர் சூட்டுக்கு இலக்காகி காய

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ் அரச ஊழியர் சிலர் மட்டுநகரில் கைதாகினர்

உத்தியோக அலுவல்களின் நிமித்தம் கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு நகரப் பகுதிக்குச் சென்ற தமிழ் அரச ஊழியர்கள் சிலர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச ஊழியர்களைப் பொது மைதானம் ஒன்றுக்கு அழைத்துச் சென்ற இராணுவத்தினர் அவர்களைத் தொடர்ந்து இரு தினங்கள் அங்கு தடுத்துவைத்தனர் என்றும் —

அவர்களில் 20 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட சிலர் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-5]

1990 ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை:

## சிங்கள - தமிழ் மாணவர்களின் பெறுபேறுகளை ஒப்பிடக் கூடாது

### நாடாளுமன்றத்தில் தினேஷ்

கொழும்பு, பெப். 23

1991 ஏப்ரலில் தமிழ்ப் பகுதிகளில் நடந்த ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளையும் —

1990 ஆகஸ்டில் நாட்டின் ஏனைய பகுதிகளில் நடந்த ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளையும் —

ஒப்பிட்டுப் பல்கலைக் கழக அனுமதி வழங்குவது நியாயமற்றது. அது நிறுத்தப்பட வேண்டும். இனிமேல் மீண்டும் அப்படி ஒரு நிலை ஏற்படாமல் தடுக்க வேண்டும்.

— இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. திரு. தினேஷ் குணவர்த்தனா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டுக்கான ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## படையினர் சூடு; இருவர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 23

மட்டக்களப்பு, பள்ளிக்குடியிருப்பு பகுதியை புதனன்று சுற்றி வளைத்த படையினர், அப்பகுதிகளில் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது மார்க்கண்டு மாதவராஜா, சிவராசா சாம்பசிவம் ஆகிய இருவரும் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## குடிசைகளுக்கு படையினர் தீ

யாழ்ப்பாணம், பெப். 23

கடந்த இரு வாரமாக அம்பாறையில் இடம்பெற்ற "கிழக்குத் துண்டாடல்" (Operation Eastern Cut-off) இராணுவ நடவடிக்கையின் போது குடுமியாமலைப் பகுதியில் உள்ள தமிழர்களின் குடிசைகள் பலவும் படையினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5)

அரச வங்கிகள் குறித்து

## பிரதமரின் அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் கண்டனம்

கொழும்பு, பெப். 23

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் தற்போதைய நிலைமை பற்றி பிரதமர் விஜேதுங்க வெளியிட்ட தகவல்கள் குறித்து எதிர்க்கட்சி எம். பிக்கள் பலரும் கண்டனம் வெளியிட்டுள்ளனர் என்று பி. பி. சி சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

அரச வங்கிகள் யார், யாருக்குக் கடன் கொடுத்து அவை மீட்கப்பட முடியாமல் இருக்கின்றன என்ற விவரம் 2 வருடங்களுக்கு முன்னரே 'ராவய' பத்திரிகையில் வெளியானது.

அந்த விவரங்களின்படி,

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஹமில்டன், கொப்பேகடுவ வவுனியாவுக்கு விஜயம்

கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, வடபகுதிக்குப் பொறுப்பான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் பலர் அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்தனர்.

இதற்கு முன்னர் — மாத மத்தியில் — இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்னவும், மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவுடன் வவுனியா மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தார்.

வவுனியாவில் குவிக்கப்பட்டிருக்கும் துருப்புக்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையிலேயே இவர்களது விஜயங்கள் அமைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம்—

நேற்று முன்தினம் மின்னேரியாவில் உள்ள இராணுவப் பயிற்சி முகாமில் உயர் அதிகாரிகளின் மாநாடு ஒன்று நடைபெற்றது. மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். [ஒ-த-5]

## உள்ளூராட்சிசபை மின் பிரிவுகளை மின்சார சபை பொறுப்பேற்கும்

### வடக்கில் பணிகள் உடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 23

வடபகுதியில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் மின் விநியோகப் பிரிவுகளை மின்சார சபை பொறுப்பேற்கவுள்ளது. இதற்கான நிர்வாகப் பணிகள் விரைவில் ஆரம்பமாகும் என்று அறிய வந்துள்ளது,

நாட்டின் ஏனைய பகுதிகளில் மின்சார உற்பத்தி, மின்சார விநியோகம் ஆகிய வேலைகளை உள்ளூராட்சி நிறுவனங்களிடம் இருந்து இலங்கை மின்சார சபை பொறுப்பேற்று வருகிறது.

வவுனியா மாவட்டத்திலும் இப்போது மின்சாரம் சம்பந்தமான சகல பணிகளும் மின்சார சபையின் நிர்வாகத்தின் கீழேயே வந்துள்ளது.

வட பிராந்தியம் முழுவதிலும் மின்சார விநியோக வேலைகளையும், உள்ளூராட்சி சபைகளின் மின்சாரப் பிரிவு ஊழியர்களையும் பொறுப்பேற்கும் வேலைகளை இவ்வாண்டு முடிவதற்குள் செய்து முடிக்குமாறு தலைமையகம் பணித்திருக்கிறது.

வடபிராந்தியத்துக்கு விரைவில் மின்சார விநியோகம் கிடைக்கும் என எதிர்பார்க்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வளைகுடாயுத்தத்தால் பாதிக்கப்பட்ட

## இலங்கையருக்கு நஷ்டஈடும் மேலதிக கொடுப்பனவும்

கொழும்பு, பெப். 23

வளைகுடாப் போரை அடுத்து நாடு திரும்பிய இலங்கையருக்கு நட்டஈட்டுடன் மேலதிகக் கொடுப்பனவும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஈராக் மற்றும் குவைத் நாடுகளிலிருந்து வெளியேறிய தனிநபர்களான இலங்கையருக்கு 2,500 டொலர் முதல் 4 ஆயிரம் டொலர் வரையும்,

குடும்பமாகத் தங்கி இருந்து வெளியேறியோருக்கு 5 ஆயிரம் டொலர் முதல் 8 ஆயிரம் டொலர் வரையும் நட்டஈடு வழங்கப்படும்.

நட்டஈடு எப்போது வழங்கப்படும் என்பதை ஐ. நாவின் நட்டஈட்டுக் குழு விரைவில் அறிவிக்கவிருக்கின்றது.

1990 ஆகஸ்ட் 2ஆம் திகதி முதல் 1991ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் திகதி வரையிலான கால எல்லைக்குள் குவைத், ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து வெளியேறிய இலங்கையருக்கே இந்த நட்டஈடு வழங்கப்பட உள்ளது.

அதேசமயம் வளைகுடாப் போரின் போது குவைத்தில் தங்கியிருந்த குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 5 ஆயிரம் டொலர் நட்டஈடும் வழங்கப்படும்.

இந்த நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ள எழுத்து மூலமான அத்தாட்சியை கமிஷன் கோராது என்றும்—

எனினும் நட்டஈட்டுக்கு விண்ணப்பிப்பவர்கள் குறிப்பிட்ட காலத்தில் குவைத்தில் இருந்தார்கள் என்பதை நிரூபிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## உதவி வழங்கும் நாடுகள் நிபந்தனை விதிக்கவில்லை

### சபையில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 23

இலங்கைக்கு உதவி வழங்கிய நாடுகள், உதவி வழங்குவதற்கான நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை.

பிரதமர் டி. பி. விஜேதுங்கா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனித உரிமை மீறல் தொடர்பாக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளையும் அந்த நாடுகள் பாராட்டியுள்ளன என்றும் பிரதமர் கூறினார். [ஒ-3]


**கால்நடை வளர்ப்போரின் கவனத்திற்கு!**

உங்கள் கால்நடைகளை
சிறந்த முறையில் பராமரிக்க,
தரமான கால்நடைத் தீவனங்கள், மருந்துகள்
வேண்டும்.

எனவே,

நீங்கள் நாடவேண்டிய

இடம்:

"மருதம்" கால்நடைத்தீவன அங்காடி

★ சாவகச்சேரி
★ சுன்னாகம்
★ சுழிபுரம்

உங்கள் தேவைகளை இப்போது பூர்த்தி செய்கிறது.

"மருதம்
கால்நடைத் தீவன அங்காடி"

[19825]


## இன்று நடப்பவை

கிளிநொச்சி, பெப். 23

கிளிநொச்சி மாவட்டத்தில், கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் புளியம் பொக்கணை, 7 ஆம் கட்டைச் சந்தியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் புதிய கிளை ஒன்று, இன்று ஞாயிறு நண்பகல் 12 30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

★ ★ ★

வடமராட்சி, பெப். 23

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் இன்று இரவு 7 மணிக்கு விடுதலைப் புலிகள் பிரமுகர்களால் ''போர்க் காலத்தில் மக்களின் பங்களிப்பு'' பற்றிய கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. [ஒ-165]

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி இ. பாலசுந்தரத்தின் தயாரிப்பு நெறியாள்கையில் யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேறுகின்றது. [ஒ]

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 23

சாவகச்சேரி இந்துக் கல்லூரி திறந்த வெளியரங்கில் இன்று இரவு 7.30 மணிக்கு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

எழுச்சிப் பாடல்களும், ''சுதந்திரப் போர் வெல்லும்'' என்ற நாடகமும் நிகழ்ச்சியில் இடம்பெறுகின்றன. [ஒ]

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியின் மாணவர் அவையினால் நடத்தப்படும் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்று மாலை 3 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இறுதியாட்டம் நாளை மறுதினம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று மாலை அங்கு நடைபெறும் மற்றொரு கண்காட்சி ஆட்டத்தில் ஷப்றா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பளை கிறாஸ்கொப்பர்ஸ் அணி மோதவிருக்கிறது. [உ]

## 'எய்ட்ஸ்' பரிசோதனை கட்டாயம் செய்ய வேண்டும்

### சட்டம் வருகிறது என்கிறார் ரணில்

கொழும்பு, பெப். 23

கட்டாய 'எய்ட்ஸ்' பரிசோதனையைச் செய்து கொள்ள ஒவ்வொருவரையும் வற்புறுத்தும் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதென அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இச்சட்டத்தின் கீழ் ஆய்வு கூடங்கள் பதிவு செய்யப்படும். எய்ட்ஸ் வைத்திய இலவச அத்தாட்சிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

தகவல் கொடுக்காமல் விடுவது குற்றமாக்கப்படும். இவ்விதிகளை மீறுபவர்களுக்கு ஆகக் கூடுதலாக 50 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்படும்.

இச்சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். [ஒ-எ]

## சாவகச்சேரிப் பகுதியிலும் காவல்துறை சோதனை

### சைக்கிள்காரரர் பலருக்கு தண்டம்

சாவகச்சேரி காவல்துறையினர் வீதிப் போக்குவரத்துக்களைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை வீதிகளில் திடீர் சோதனையில் ஈடுபட்ட காவல்துறையினர், போக்குவரத்து விதிகளை மீறிய சைக்கிள் பயணிகள் பலரிடம் குற்றப் பணம் அறவிட்டனர்.

வீதிகளில் சமாந்தரமாக வந்த பலர் குற்றப் பணத்தைக் கட்டினர்.

மோட்டார் சைக்கிளில் இரவில் வெளிச்சமின்றி சென்ற சிலரிடம் இருந்தும் குற்றப் பணம் அறவிடப்பட்டது. (ஒ-117)

## இந்தியா 9 ஓட்டங்களால் இங்கிலாந்திடம் தோல்வி!

பேர்த், பெப். 23

நேற்று ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதற்சுற்று ஆட்டத்தில் இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்து அணியிடம் 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 236 ஓட்டங்களை எடுத்தது.

பதிலளித்தாடிய இந்திய அணி 49.2 ஓவர்களில் 227 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 9 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

இந்தியத் தரப்பில் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் 39 ஓட்டங்களையும் ரவி சாஸ்திரி 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

(உலகக் கிண்ண கிரிக்கெட் பற்றிய மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்) [உ-த]

## ஷெல் வீச்சின் மத்தியிலும் பொன்னாலையில் அறுவடை

சுழிபுரம், பெப். 23

காரைநகர் படையினர் இரவு பகல் வித்தியாசமின்றி திடீர், திடீரென ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

பகல் வேளையில் ஷெல் தாக்குதல் நடந்தாலும், பொன்னாலைப் பகுதி மக்கள் வயல் அறுவடையில் மூச்சாக இருந்து வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை ஷெல் வீச்சின் மத்தியிலும் வயல்களில் அறுவடை தொடர்ந்து நீடித்ததாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இதேசமயம், விவசாயிகள் தமது வயல்களில் இருந்து வைக்கோலையும் வேலை முடிந்த கையோடு எடுத்துச் சென்றுவிடுகின்றனர். எரிந்தபடி வந்து விழும் ஷெல் சிதறல்களினால் வைக்கோல் எரிந்து நாசமாகிவிடும் என்ற அச்சமே இதற்குக் காரணம் என்று விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-28]

## வன்செயல்கள் அதிகரிப்பு வின்சென்ட் பெரேரா தகவல்

கொழும்பு, பெப். 23

கடந்த மாதம் 15 ஆம் திகதிக்கும் இம் மாதம் 14 ஆம் திகதிக்கும் இடையே இடம் பெற்ற வன்செயல்களைப் பார்க்கும் போது விடுதலைப் புலிகளும் தெற்கே அரச விரோதக் கிளர்ச்சிவாதிகளும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறைந்திருப்பதாகக் காணப்படவில்லை.

இக் குழுக்கள் தங்களின் நோக்கங்களை அடைவதற்காக வன்முறைகளைக் கைவிடவில்லை.

[6 ஆம் பக்கம் பார்க்க[


திருமறைக் கலாமன்றத்தின்
கவின் கலைகள் பயிலகம்
SCHOOL OF FINE ARTS
வழங்கும்

**நடன, நாடக நிகழ்ச்சிகள்**

காலம்: 26-2-1992 (புதன்) மாலை 6-45 மணி
இடம்: மன்ற அரங்கு - யாழ். பிரதான வீதி
பிரவேசம்: இலவசம்

ஆசனப் பதிவு வேண்டுவோர் முன்கூட்டியே அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

திருமறைக் கலா மன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

[9/1538]



விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின்
ஆதரவில்
கலை பண்பாட்டுக் கழகத்தினரின்
"உயிர்த்த மனிதர் கூத்து"
(நாடகம்)

சாந்தன் இசைக்குழுவினரின்
"போர்க்கால இராகங்கள்"

இடம்: அரியாலை சனசமூக நிலைய
காசிப்பிள்ளை அரங்கு
காலம்: இன்று (23-02-92) பிற்பகல் 6-00 மணிக்கு
அன்பளிப்பு: ரூபா 10-00

[சி/1539]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு

# பயனுள்ள தீர்வை வழங்கும் தகுதி பௌத்தருக்கு உண்டு

## ஜனாதிபதி பிரேமா கூறுகிறார்

கொழும்பு, பெப். 23

புத்த பெருமானின் செல்வாக்கினால் பயனடைந்துள்ள சிங்கள பௌத்தர்கள், வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குப் பயனுள்ள தீர்வை வழங்கும் ஆற்றல் படைத்தவர்கள் ஆவர்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா கூறியுள்ளார்.

வண. தேவமொட்டாவ அமரவன்ஸ தேரரின் மூன்றாவது ஆண்டு நினைவுக் கூட்டத்தில் பேசுகையிலேயே ஜனாதிபதி இதனைச் சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு - கிழக்குப் பகுதி தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு, அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் பயங்கரவாதத்தில் ஈடுபடும் குழுக்களைத் தான் நாம் மீண்டும் சந்திக்க வேண்டியிருக்கும்.

புத்த பெருமான் காட்டிய வழியில் தீர்வு காணும் பொறுப்பு சிங்கள பௌத்தர்களைச் சார்ந்ததாக உள்ளது. அழிவு நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டாமல் மகா சங்கத்தினரின் ஆலோசனையைப் பெற்று பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்தவும், நீதி வழங்கவும் நாம் தவறக் கூடாது.

20 வருடங்களாக வடக்கு-கிழக்கு மக்களுக்கு அளிக்கப்பட்ட தீமைகளை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். எம்மிடையே ஐக்கியம் காணப்படாததன் காரணமாக வெளிநாட்டுப்படை ஒன்று வடக்கு கிழக்குப் பகுதியில் குடியேற வேண்டி இருந்தது. அரச பிரமாணங்கள் அங்கு அமுல் செய்யப்படுவதில்லை.

மகா சங்கத்தினர் இப்போது வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்யலாம். புத்த பெருமான் காட்டிய ஒரு மனிதான நடவடிக்கை, கலந்தாலோசனை, சமரசம் ஆகியன பயனளித்துள்ளன —என்றார். (ஒ-எ)

## தேங்காய்களுக்குள் நிரப்பி பெற்றோல் கடத்தல்!

### தாண்டிக்குளத்தில் குட்டு அம்பலம்

கொழும்பு, பெப். 23

வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக 45 தேங்காய்களுக்குள் பெற்றோலை நிரப்பி கடத்த முயன்ற ஒருவர் படையினரிடம் சிக்கிக் கொண்டார்.

தேங்காய்களுக்குள் சாதுரியமாக பெற்றோலை நிரப்பி, சம்பந்தப்பட்டவர் எடுத்து வந்திருந்தார் என்றும்—

தடைமுகாமில் படையினரின் சோதனையின் போது இவரின் 'குட்டு' அம்பலத்துக்கு வந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

45 தேங்காய்களுக்குள்ளும் சுமார் 20 லீற்றர் பெற்றோல் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட நபர் கைது செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

### அன்பளிப்பு

தென்மராட்சி, பெப். 23

எழுதுமட்டுவாள் சி. சி. த. க. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அண்மையில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் அப்பியாசப்புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினர். (ஒ-117)

கொழும்புத் தலைமையகம்

## வங்கிகளுக்கு ஜெனரேட்டர் வழங்குவதற்கு மறுப்பு

யாழ். மாவட்டத்தில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளைகளுக்கு ஜெனரேட்டர்களை வழங்க இலங்கை வங்கியின் கொழும்பு தலைமையகம் மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள இரு பிரதான இலங்கை வங்கிக் கிளைகளுக்கு மட்டுமே தற்போது ஜெனரேட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய கிளைகளுக்கும் ஜெனரேட்டர்களை வழங்குமாறு தலைமையகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. [ஒ-3]

## மருந்து இன்றி நோயாளர் கஷ்டம்

தென்மராட்சி, பெப். 23

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் மருந்துகள் இல்லாததால் நோயாளர்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவசர நோயாளர்களுக்கு ஏற்றப்படும் சேலைனைக் கூட, வெளியில் இருந்து வாங்கி வருமாறு பணிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (ஒ-117)

## இஸ்ரவேலைப் பின்பற்ற இந்திய அரசு முயற்சி

பயங்கரவாதத்தை அடக்குவதில் இஸ்ரவேலின் அனுபவத்தைப் பயன்படுத்தலாமா என்பது பற்றி இந்தியா ஆராய்ந்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் இத்தகவலை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் அமெரிக்காவுக்குத் தாம் விஜயம் செய்ய விருப்பதாகவும் திரு. பவார் தெரிவித்தார்.

அமெரிக்காவிடமிருந்து இராணுவ சாதனங்கள் வாங்குவது தான் அமெரிக்க விஜயத்தின் நோக்கமா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு — அமெரிக்க - இந்திய இராஜதந்திர உறவு குறித்து விரைவில் இந்திய மத்திய அரசின் அரசியல் விவகாரக் கமிட்டி தீர்மானிக்க விருப்பதாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் சொன்னார்.

தெற்காசியப் பிராந்திய அரசியல் நிலைவரம் பற்றி வாஷிங்டனில் அமெரிக்கத் தலைவர்களுடன் தான் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாகவும் திரு. பவார் சொன்னார். [அ-எ]

# தரம் குறைந்த சீன ஆயுதங்கள்; தாய்லாந்து அரசும் ஏமாற்றம்

பாங்கொக், பெப். 23

சீன யுத்த ஆயுதங்கள் தரம் குறைந்தவை என்று தாய்லாந்து அரசு அறிவித்துள்ளது.

தாய்லாந்து பாதுகாப்பு அமைச்சு வெளியிடும் சஞ்சிகையில் இத்தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆயுதங்களையும், கவச வாகனங்களையும் சீனாவிடமிருந்து தாய்லாந்து 'சிநேக பூர்வமான' விலையில் வாங்கியது.

ரி — 69 ரக டாங்கிகள், திருத்தும் டிரக்குகள், ரி—85 ரக துருப்புகளை ஏற்றிச் செல்லும் கவச வாகனங்கள், கவச கார்கள், ஆட்டிலறி ஆயுதங்கள், விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் ஆகியவற்றை தாய்லாந்து பெரும் எண்ணிக்கையில் சீனாவிடமிருந்து வாங்கியது.

மேற்கு நாடுகளில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட டாங்கிகள் தான் சீனாவில் இருந்து வருவதாக தாய்லாந்து அரசு முதலில் எண்ணியது. அவை வந்து சேர்ந்த பின்னர்தான் சோவியத் நாட்டுத் துப்பாக்கிகள் அந்த டாங்கிகளில் பொருத்தப்பட்டிருந்ததை தாய்லாந்து இராணுவம் கண்டு பிடித்தது.

ஏனைய டாங்கிகளில் பாவிக்கப்படும் அமெரிக்க ஷெல் குண்டுகளை சோவியத் துப்பாக்கிகளில் பாவிக்க முடியாது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவில் இருந்து வாங்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் போர் ஆயுதங்களுக்கு தேவையான உதிரிப்பாகங்களைப் பெறுவது பெரும் கஷ்டமான காரியம் என்றும் அந்த சஞ்சிகை தெரிவித்துள்ளது.

தாய்லாந்து கடற்படையிடம் தற்போது உள்ள ஆறு சீனத் தயாரிப்பான யுத்தக் கப்பல்களும் எப்போதும பழுதடைந்தவண்ணமிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடந்த ஆண்டு செப்டம்பரில் இலங்கை 3 லட்சத்து 52 ஆயிரம் டொலர் செலவில் சீனாவிடமிருந்து மூன்று பீரங்கிப் படகுகளை வாங்கியது. இயந்திரக் கோளாறு காரணமாக அவை இயங்காத நிலையில் இருப்பதாக ஏசியா வீக் இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## உலக கிண்ண கிரிக்கெட்டில் முதல் வெற்றி நியூசிலாந்துக்கு

ஒக்லாந்து, பெப். 23

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்று இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து அணி, ஆஸ்திரேலியாவை 37 ஓட்டங்களால் தோற்கடித்தது.

50 ஓவர்களில் ஆறு விக்கெட்டுகள் இழப்பிற்கு நியூசிலாந்து அணி 248 ஓட்டங்களை எடுத்தது. எல்லா விக்கெட்டுக்களையும் இழந்த நிலையில் ஆஸ்திரேலிய அணி 211 ஓட்டங்களைப் பெற்றது.

நியூசிலாந்து - ஒக்லாந்து நகரில் இப்போட்டி இடம்பெற்றது.

ஆட்டத்தின் கதாநாயகராக நியூசிலாந்து அணியின் கப்டன் மார்ட்டின் குறோ திகழ்ந்தார். 130 பந்துகளைச் சந்தித்து நூறு ஓட்டங்களுடன் மார்ட்டின் குறோ ஆட்டமிழக்காமல் இருந்தார்.

### இன்றைய போட்டிகள்

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இன்று ஞாயிறு இடம்பெறும் போட்டிகள் வருமாறு:

1. இலங்கை எதிர் சிம்பாப்வே; இடம்: நியூசிலாந்து;
2. இந்தியா எதிர் பாகிஸ்தான்; இடம்; ஆஸ்திரேலியா.

[இ-எ]


## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

தொழில் நுட்பக் கல்லூரி ''மாணவர் அவை'' யினரால் நடத்தப்பட்டு, பின்னர் இடை நிறுத்தப்பட்டிருந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதி, இறுதி ஆட்டங்கள் எதிர்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன.

ஞாயிறு (23 - 02 - 92) மாலை 3-00 மணி — அரையிறுதி ஆட்டங்கள்

செவ்வாய் (25 - 02 - 92) மாலை 3-00 மணிக்கு — இறுதியாட்டம்.

''மாணவர் அவை'',
தொழில் நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[19822]



# A/L - 91

## பயிற்சிப் பரீட்சை

| | | | | |
|---|---|---|---|---|
| 03 - 03 - 1992 | 8-30 | — | பௌதிகவியல் | - II |
| (செவ்வாய்) | 12-30 | — | பௌதிகவியல் | - I |
| 05 - 03 - 1992 | 8-30 | — | இரசாயனவியல் | - II |
| (வியாழன்) | 12-30 | — | இரசாயனவியல் | - I |
| 10 - 03 - 1992 | 8-30 | — | விலங்கியல் | - II |
| (செவ்வாய்) | 8-30 | — | பிரயோக கணிதம் | - II |
| | 12-30 | — | விலங்கியல் | - I |
| | 12-30 | — | பிரயோக கணிதம் | - I |
| 12 - 03 - 1992 | 8-30 | — | தாவரவியல் | - II |
| (வியாழன்) | 8-30 | — | தூய கணிதம் | - II |
| | 12-30 | — | தாவரவியல் | - I |
| | 12-30 | — | தூய கணிதம் | - I |

★ 01 - 03 - 1992 இற்கு முன் தமது பெயரைப் பதிவு செய்து அனுமதி அட்டையைப் பெறுபவர்கள் மட்டுமே பயிற்சிப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள். 01 - 03 - 1992 ற்குப் பின் பரீட்சைக்கு புதிய அனுமதி வழங்கப்படமாட்டாது.

★ 20 - 03 - 1992 அன்று அனைத்து விடைத்தாள்களும் திருத்தப்பட்டு புள்ளிகளுடன் வழங்கப்படும். முதன்மைப் புள்ளி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பரிசில் வழங்கப்படும்.

★★ எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பயிற்சிப் பரீட்சைகளில் பங்கு பற்றலாம்.

மேலதிக விவரங்களுக்கு:

BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[5059]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கைத்தறியிற் செய்யப்பட்ட கிறே வேட்டி, சால்வை, கிறேபப்பிளின், சேலை, துவாய், பெற்சீற் என்பன விற்பனைக்குண்டு. 10, 2/30', 50 இலக்க கைத்தறி நூல் வகைகளும் எமது சங்க வாக்காள அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டாவில். [19813]

நல்ல இன வளர்ப்பு புறா அடைவைப்பதற்கு ஏற்ற பெண்டம் வெள்ளடியன் கோழி முட்டைகளும், ஒரு சோடி பொமனேரியன் நாயும் விற்பனைக்குண்டு தொடர்பு: கே. அன்னலிங்கம், சாந்தன் வீதி (கலட்டி ஒழுங்கை), கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (19821)

தேன் பெட்டிகள் இராணிப் பூச்சிகளுடன் விற்பனைக்கு உண்டு. கலர் மீன்களும் [வளர்ப்பு மீன்] விற்பனைக்கு உண்டு. தொடர்பு; சி. பவேந்திரன், 47, கோவில் வீதி, யாழ்ப்பாணம். [19819]

பாவித்த Chinese Made Voltage Stabilizer விற்பனைக்குண்டு. Radio Manuals, 121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி–1615]

## சோயா தேவை

சோயா மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். கையிருப்பில் உள்ளவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும். அண்ணா பாம், இணுவில். (சி 1613)

## வினாத்தாள் (ஆண்டு 5, 4)

புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் ஆண்டு-5 23-2-92 ஞாயிறும், ஆண்டு-4 1-3-92 ஞாயிறும் வெளியிடப்படும், பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [19808]

## சோதிட நூல்

B. V. Raman எழுதிய The Astrological Magazine, 1992 ஆம் ஆண்டு மலர் கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, 255, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி-1614]

## அப்பியாசக் கொப்பிகள்

சகல தர அப்பியாசக் கொப்பிகள், C. R. கொப்பிகள் விற்பனையாகின்றன. அறிவகம், 374, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். [சி–1608]

## ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கில (Stencils) ரைப்பிங் வேலைகள் மற்றும் தமிழ் ஆங்கில ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றன. ரைப்ரைட்டர் றிபன்கள் விற்பனைக்கு உண்டு. பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 3 ஆம் ஒழுங்கை, கிளை பிரதான வீதி, மானிப்பாய். (சி-1612)

## ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [சி–1462]

## மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களும், மாற்றுத் திருமணத்தை விரும்புவோரும், அல்லாதோரும் நிறைய இருக்கின்றார்கள், மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19823]

## திருமண சேவை

ABCDE விவாகப்பொருத்துனர் ஸ்தாபனத்தில், வெளிநாட்டு மணமக்களும், உள்நாட்டு மணமக்களும், செவ்வாய்க் குற்றமுள்ளோரும், குற்றமற்றவர்களும் ல/ராகு கேது உடையோரும் சகல துறையிலும் உள்ளனர். 9 மணியில் இருந்து 2 மணி வரையும் தொடர்பு கொள்ளலாம். 20, கண்டி றோட், சுண்டிக்குளி. [19796]

## தவறிவிட்டது

தர்மலிங்கம் தவேந்திரராஜாவாகிய எனது அடையாள அட்டை ஊரியான் வழியினூடாக சாவகச்சேரிக்கு வரும் வழியில் தவறிவிட்டது. இதனைக் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து தர்மலிங்கம் தவேந்திரராஜா, உரும்பராய் வடக்கு, சரஸ்வதி சனசமூக நிலையம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கவும். [19810]

## சோதிட நூல்கள்

ரேகை சாஸ்திரம், எண் சோதிடம், கருணைக் கடல் பாபா', சாயி ஞான ரகசியம், முற்பிறவி அற்புதங்கள் நூல்களாசிரியர் Prof. சத்தியதாஸன், சித்தன்கேணிச் சந்தி, சோபிதா, யாழ்ப்பாணம். [19820]

## கல்வி

G. C. E. [O/L] இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்தில் அதி உயர் விஷேட தரத்திற்கு கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [5054]

## தவறிவிட்டன

புகைப்படங்கள் அடங்கிய மஞ்சள் நிறக் கடிதஉறையொன்றும், மூக்குக்கண்ணாடியொன்றும் ஓமந்தைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடைப்பட்ட பாதையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 839, கடற்கரை வீதி, பாஷையூர் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [19815]

## அன்ன பேதி

புகையிலை உணர்த்துவோருக்கு [புகையிலை கிரிமாற்று] 1kg ரூபா 75/-க்கு மேல். திருமதி க. சத்தியவதனி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். [5062]

## அபயங்கார் கொழும்பு விஜயம்

இந்திய வெளியுறவு அமைச்சின் இணைச் செயலாளர் ஆர். அபயங்கார் கொழும்புக்கு விஜயம் செய்துள்ளார்.

தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படும் உதவிகள் பற்றி நேரில் காணவே அவர் விஜயம் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-எ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**சுப்பையா ஏகாம்பரநாதன் (*S. E.* நாதன்)**

[இளைப்பாறிய தபாலதிபர், கொழும்பு]

தோற்றம்: **27 — 01 — 1901** மறைவு: **25 — 01 — 1992**

ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

**மக்கள், மருமகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. [19816]

## மணலாறு நூல் அறிமுக விழா

மணலாறு நூல் அறிமுக விழா இன்று ஞாயிறு பிற்பகல் 4-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறுகிறது

வைபவத்துக்கு யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமை வகிப்பார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சிற்றம்பலம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் சிறப்புரை வழங்குவார்கள். [இ-30]

# பதவி வெற்றிடங்கள்

### பச்சிலைப்பள்ளி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம்

**1. கணக்குப் பதிவாளர்:**

குறியீடு - 301 – 8

வேதனம் - 1045 — 1705

40 x 4 — 50 x 10

**தகைமைகள்:**

அ. கூட்டுறவுப்பணியாளரின் 9 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியிலான 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத் திட்டத்திலான இதை ஒத்தபதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராஜ்ஜியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் முடிவு நிலை பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக |கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 02 வருடத்திற்கு குறையாத அனுபவமும் அல்லது ஐக்கிய இராஜ்ஜியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் [உயர்தரம்],/க.பொ. த.(உயர்தரம்)இல் கணக்கியலை உள்ளடக்கியதான மூன்று பாடங்களில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**2. லிகிதர்:** குறியீடு - 302 – 8

வேதனம்: 1005 — 1705

40 x 5 — 50 x 10

**தகைமைகள்:**

அ கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / லிகிதர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத் திட்டத்தில் இதை ஒத்த பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஐக்கிய இராஜ்ஜியத்தில் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் முடிவு நிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்குத்துறை தொடர்பிலான பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராஜ்ஜியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்குத் துறை தொடர்பிலான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயரதரம்) / க. பொ. த (உயர்தரம்) இல் மூன்று பாடங்களில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத்துறை தொடர்பிலான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

**வயது:** இரு பதவிகளுக்கும் விண்ணப்ப முடிவு திகதியில் 21க்கும் - 40க்கும் இடைப்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**
1. சங்கப் பணியாளர்களுக்கு உரித்தான மேலதிகப் படிகளும் வழங்கப்படும்.
2. சங்கப் பணியாளர்களுக்கும், சங்க எல்லைப் பரப்பிற்குட்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 05-03-1992 அன்று அல்லது, அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக "தலைவர், பச்சிலைப்பள்ளி தெ. ப. பொ. கூ. சங்கம் - பளை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
பச்சிலைப்பள்ளி தெ. ப. பொ. கூ. சங்கம்,
பளை.

[19824]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நம்பிக்கை வருவது எப்படி?

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பது சகலரதும் – தமிழர்கள், சிங்களவர்கள், வெளி உலகத்தார் ஆகிய எல்லாத் தரப்பினரதும் – விருப்பம். ஆனால் அதற்கான சரியான, நியாயமான தீர்வு என்ன? அப்படி ஒரு தீர்வை எவ்வாறு எய்துவது? – இவற்றிலேயே வெவ்வேறு கருத்துக்களும் அணுகு முறைகளும் முன்வைக்கப்படுகின்றன. முரண்பாடுகள் நிலவுகின்றன.

எல்லாம் சரிதான்; சிங்கள அரசியல்வாதிகள் வரமும் வரை, அவர்கள் மத்தியில் முழுப்படியான, பூரணமான அடிப்படை மாற்றம் உருவாகும் வரை இனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என்பதில் மிகுந்த சந்தேகம் உண்டு.

தென்னிலங்கையில், தினேஷ் குணவர்த்தனா போன்ற அரசியல் வாதிகள் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் இடம் பிடித்துக் கொண்டு, இனவாதத்தைக் கக்கும் வரை, தமிழர் மீதான பொறாமை, அழுக்காறு, அடக்கி வைத்தல் ஆகிய விஷங்களைக் கொட்டிக் கொண்டிருக்கும் வரை நல்லதில் நம்பிக்கை வருவது எப்படி?

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடக்க வேண்டிய ஜீ.சி.ஈ. உயர்தர பரீட்சை தமிழ் மாவட்டங்களில் நடக்கவில்லை. தமிழ்ப் பகுதிகள் மீது அரசாங்கம் அதி தீவிரமான, அதி கொடிய இராணுவத் தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டிருந்த வேளை அது.

அதனால் பரீட்சை நடத்த முடியாது என்று அரசாங்கமே அறிவித்து, ஒத்திவைத்து 1991 ஏப்ரலில் பதில் பரீட்சை நடத்தியது.

தமிழ் மாணவர்கள் எட்டு மாத காலம் கூடுதலாகப் படித்து எழுதிய பரீட்சைப் பெறுபேறுகளையும், சிங்கள மாணவர்கள் வழமையான காலத்தில் பரீட்சை எழுதிப் பெற்ற பெறுபேறுகளையும் ஒப்பிட்டுப் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படக் கூடாது என்று நாடாளுமன்றத்தில் விஷம் கக்கியிருக்கிறார் தினேஷ் குணவர்த்தனா!

1990 ஜூன் மாதத்தில் அரசு தமிழர் மீது யுத்தத்தை பிரகடனப்படுத்தி போரை நடத்தியதால் தமிழ் மாணவர்களே தமது கல்வியை இழந்தார்கள். பாடங்களை உள்வாங்கி மனம் ஒன்றிப் பயில முடியாத பதற்றமான சூழ்நிலையில் வாழ்ந்தார்கள், பாடங்களை பயில்வதற்கு மண்எண்ணெய் தானும் இல்லாமல் அவதியுற்றார்கள்.

இவற்றை எல்லாம் மூடி மறைத்து விட்டு, தமிழ் மாணவர்கள் எட்டு மாதங்கள் பயில்வதற்குச் சலுகை கிடைத்ததாக புரட்டுகிறார் தினேஷ்!

தமிழ் மாணவர் 1990 ஆம் ஆண்டுப் பரீட்சை என்ற அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி பெறாமல் துண்டிப்பதற்கான கூரிய வாள் அவரது குதர்க்க வாதம்!

இவ்வாறு துண்டிப்பதன் மூலம் 1991 ஆம் ஆண்டில் பரீட்சை எழுத முடியாமல் இவ்வருடம் ஏப்ரலில் நடக்கும் என அறிவிக்கப்பட்ட விசேட பரீட்சைக்குத் தோற்றுவோரின் பல்கலைக்கழக அனுமதியையும் பின்தள்ளிவிடலாம்!

அவ்வாறானால் தமிழர்கள் உரிமைகளுடனும், வசதிகளுடனும் வாழ்வதை சிங்களத் தலைவர்கள் சகித்துக் கொள்வார்கள் என்பதற்கு உத்தரவாதம் என்ன? இனப்பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என்பது தான் என்ன நம்பிக்கை?

# கழிவுப் பொருள்களை வீசாதீர்கள்; மீளப் பயன்படுத்தப் பழகுங்கள்!

"ஊழிக்காலம் விரைவில் வருகிறது." 'உலகம் அழிந்து விடப் போகிறது' இவ்வாறான எச்சரிக்கைகள் காலத்துக்குக் காலம் எழுப்பப்பட்டு வந்துள்ளன.

அணு ஆயுத உற்பத்திப் பெருக்கம், பூமியின் வெப்பம் அதிகரிப்பு, எய்ட்ஸ் நோயின் தீவிர பரவல், யுத்தங்கள், படுகொலைகள், இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் அழிவுகள் என்பவற்றை இன்று நாளாந்தம் கேட்டு வரும் மக்கள் 'உலகம் அழிந்துவிடப் போகிறது' என்னும் கூற்றை நம்பவே எத்தனிப்பர்.

உலகம் அழியப் போகிறது என்ற எச்சரிக்கை புதியதல்ல. மனித சரித்திரத்தில்

## செலவினத்தைக் கட்டுப்படுத்தி சூழலையும் பாதுகாக்கலாம்

பல தடவை இவ்வாறு குரல் எழுப்பப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது பொய்யாகிப் போனது.

ஆனால் தற்போது இக்குரலுக்கு வலு அதிகரித்திருப்பதை உணரக் கூடியதாக உள்ளது. அழிவுக்கான காரணங்களும் விஞ்ஞான ரீதியாகக் காட்டப்படுகின்றன. எனினும் மக்கள் விஞ்ஞானிகளின் எச்சரிக்கைகளை உதாசீனம் செய்து நடப்பது விசனிக்கத்தக்கது.

### சூழலுக்குக் கேடு

இன்று வேறெந்த ஆபத்தையும் விட, சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்பட்டு வரும் கேடு மனித இனத்திற்கு மட்டுமன்றி உயிர்வாழ் இனங்கள் அனைத்திற்கும் அச்சுறுத்தலாக உள்ளது.

இந்த ஆபத்திலிருந்து — அழிவிலிருந்து — உலகும், உயிர்வாழ் இனங்களும் காப்பாற்றப்படுவது மனிதக் கரங்களிலேயே தங்கியுள்ளது.

அரசாங்கங்களும், பெரும் தொழிற்சாலை அதிபர்களும், விஞ்ஞானிகளும் செய்ய வேண்டியவை ஒரு புறமிருக்க, ஒவ்வொரு மனிதரும் சூழலைக் காப்பாற்ற உழைக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சஞ்சிகையில் வெளியான நகைச்சுவை துணுக்கு ஒன்றில், ஒரு யானை பாலமொன்றின் மேல் நடந்து செல்கிறது. அப்போது அந்த யானையின் முதுகில் ஊர்ந்து கொண்டிருந்த எறும்பு "ஐயையோ! எனது பாரத்தால் இந்தப் பாலம் உடைந்து விடக்கூடாதே" என நினைத்ததாம்.

இது நகைச்சுவை தான்.

ஆனாலும், பாலம் தாங்கக்கூடிய உச்சக்கட்ட எடை அந்தப் பாலத்தின் மேலாக ஏற்கெனவே ஏற்றப்பட்டிருக்குமானால் எறும்பின் எடை கூட பாலத்தை உடைந்து விழச் செய்யலாம் என்பது பொறியியல் வல்லுனர்களுக்குத் தெரியும். வாழ்வுக்கும், சாவுக்கும் இடையில் மயிரிழை இடைவெளி கூட இல்லை.

உலகில் சுற்றுப்புறச் சூழலில் பேணப்படும் சமநிலை இன்று அழிவுப் பக்கம் தாழ்ந்து விரைவில் இந்த

### சூழல் பாதுகாப்பு

உச்ச நிலை எட்டப்பட்டு விடுமோ என்ற அச்சுறுத்தல் பூதாகாரமாக உருவெடுத்துள்ளது.

ஒருவர் தனது காணிக்குள் சேரும் குப்பையைக் கூட்டித் தீ மூட்டுவதன் காரணமாக வளியின் சமநிலை முறிவடையும் ஆபத்து ஏற்பட்டுவிடும்.

எனவே ஒவ்வொருவரும் எச்சரிக்கையாக நடந்து கொள்வது இன்று அத்தியாவசிய தேவையாகிவிட்டது.

சூழலைக் காப்பாற்ற, தனி மனிதர் செய்யக் கூடியவைகள் என்னென்ன? கழிவுப் பொருள்களைக் கண்டபடி வீசியெறிவதே சூழல் கேட்டிற்குத் தனி மனிதர் செய்யும் தீங்குகளில் பிரதானமானது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒரு மனிதர் நாளொன்றில் சராசரி $1\frac{1}{2}$ கிலோ எடையுள்ள கழிவுப் பொருள்களை வீசி விடுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. வளரும் நாடுகளில் இந்த எடை சற்றுக் குறைவாக இருக்கலாம்.

கழிவுப் பொருள்களை சூழலுக்கு கேடு விளைவிக்காத வகையில் எவ்வாறு கையாளலாம் என்பது பற்றி ஓர் ஆய்வுப் பட்டறை பேர்லின் நகரில் கடந்த நவம்பர் மாதம் 19-22 திகதிகளில் நடைபெற்றது. பட்டறையின் முடிவில் மக்கள் கடைபிடிக்கக் கூடிய பல நடைமுறைகள் பற்றி ஆலோசனைகள் வெளியிடப்பட்டன.

### மீளப் பயன்படுத்தல்

கழிவுப் பொருள்கள் பற்றிய அடிப்படை உண்மை ஒன்றை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். இயற்கையில் கழிவுப் பொருள் என்று ஒன்றுமே கிடையாது. மனிதனால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களினாலேயே கழிவுப் பொருள்கள் உண்டாகின்றன. எனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களில் இருந்து மிக கூடிய பலனைப் பெற முயற்சி செய்ய வேண்டும். உபயோகித்தது போக எஞ்சியிருப்பவற்றை மறுசுற்றின் மூலம் (Re- Cycling) மீளப் பலன் தரும் வகையில் கையாள வேண்டும், அல்லது மாற்றுத் தேவைகளுக்கு அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

சிலகாலத்துக்கு முன்னர் மிதிவண்டியின் இருக்கையை சீர்செய்ய வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதனைச் சீர்செய்த தொழிலாளி, தெருவோரம் வீசி எறியப்பட்டிருந்த பழைய 'பாட்டா' செருப்பொன்றை எடுத்து அதனை அளவாக வெட்டி இருக்கையின் கம்பிக்கும் தோலுக்கும் இடையில் 'முட்டு' கொடுத்து இருக்கையைச் சீர்செய்தார். வெட்டி எடுத்தது போக, எஞ்சிய துண்டுகளை அவர் வீசி எறியவில்லை. ஒரு தகரத்தில் போட்டு வைத்தார்.

அவரின் செய்கை ஒரு பாடம்,

வளவில் சேரும் குப்பையை எரிக்காது பசளையாகப் பயன்படுத்துவதன் மூலம் சுழற்சி முறையில் தாவரங்களிலிருந்து நல்ல காய், கனிகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

இயற்கையின் நியதிப்படி குப்பை மண்ணோடு கலந்து மண்ணுக்கு உரமூட்டுகின்றது. அதனாலேயே காட்டுமரங்கள்

– காந்தசாரணன் –

இயற்கையாகவே செழித்து வளர்கின்றன.

ஆனால் மனிதர், குப்பையை தீமூட்டி எரிப்பதன் மூலம் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படுகிறது.

நாம் அன்றாடம் கடைப்பிடிக்கக்கூடிய – கடைப்பிடிக்க வேண்டிய – சில நடைமுறைகள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன ஒவ்வொருவரும் அவற்றைக் கடைப்பிடிக்க முயல்வது எல்லோருக்கும் நன்மை பயப்பதாகும்.

★ நாம் எழுதுவதற்குப் பயன்படுத்தும் தாள்களில் இருபக்கங்களையும் எழுதுவதற்குப் பயன்படுத்துவோம். — காகிதங்களை மிச்சம் பிடிப்பதால் மரங்களை அழிப்பதைக் குறைக்கலாம்.

★ பொருள்களை வாங்கும் போது குறைந்த அளவு 'பக்கிங்' உள்ள பொருள்களை வாங்குவோம்.

★ மீண்டும் பயன்படுத்தக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# எழில் தமிழாளராக விளங்கிய முதல் பேராயர் குலேந்திரன்

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் இளைப்பாறிய பேராயர் சபாபதி குலேந்திரன் இம் மாதம் 14ஆம் திகதி காலமானார். இறக்கும் பொழுது அவருக்கு வயது 91.

அவர் தமது வாழ்நாளில் இலங்கைத் தமிழ் மக்களின் வரலாற்றிலே ஒரு முக்கியமான இடத்தை வகித்தவர். தமிழ் மக்களின் அரசியல், கல்வி, சமயம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பை நல்கியவர்.

### நமக்குள்ளே ஒரு பீஷ்மர்

பேராயர் சபாபதி குலேந்திரன் 1900 செப்ரெம்பர் மாதம் இருபத்திமூன்றாம் திகதி மானிப்பாயில் சபாபதி என்னும் நொத்தாரிஸுக்கு மகனாகப் பிறந்தார். இந்த நூற்றாண்டின் கடைசிக் கட்டம் வரை அவர் வாழ்ந்து, அதன் நெளிவு, சுழிவுகளையும், அரசியல் மாற்றங்களையும் கண்ணாரக் கண்டவர்.

### முதலாவது பேராயர்

பேராயர் குலேந்திரன் தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீனத்தின் முதலாவது பேராயராக 1947 ஆம் ஆண்டு நியமனமானார். அதி. வண. டி. ஜே. அம்பலவாணர் 1971 ஆம் ஆண்டு பேராயராக நியமனமாகும் வரை அவர் அப்பதவியை வகித்து வந்தார்.

அவர் இறுதி வரை கடந்த காலச் சம்பவங்களை முழுமையாக ஞாபகத்திலே வைத்துத் தனது அனுபவங்களைப் பிறருக்கு எடுத்துரைத்து வந்தார். அவருடைய நண்பர்களை எல்லாம் கால நீரோட்டம் அடித்துக் கொண்டு சென்ற போதும், அந்த நண்பர்களின் மூன்றாம், நான்காம் சந்ததிகளுக்கும் குலேந்திரன் மிக நெருக்கமான நண்பராக இருந்தார்.

### ஆராய்ச்சி அறிஞர்

பேராயர் குலேந்திரன்தமது 90 ஆவது வயதுவரை நூல்களை எழுதிக் கொண்டே இருந்தவர். கடைசியாக அவர் எழுதிய நூல் அவர் சொல்லச் சொல்ல நண்பர் ஒருவரினால் எழுதப்பட்டது.

ஏறத்தாழ இருபது நூல்களை அவர் படைத்தளித்தார். அவர் எழுதிய நூல்களுள் மிக முக்கியமானது, "இந்து மதத்திலும், கிறிஸ்தவ மதத்திலும் அருள் என்னும் கோட்பாடு" என்னும் ஆங்கில நூல் லண்டன் மாநகரத்திலுள்ள பிரசுராலயமொன்றினால் வெளியிடப்பட்டது. இது ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திலும், லண்டன் பல்கலைக்கழகத்திலும் இறையியல் மாணவர்களினாலே எழுத்தெண்ணிப் படிக்கப்படும் நூலாகும்.

சென்னைக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தினர் முக்கிய எழுத்துலகப் படைப்பாளிகளுக்கான சிறப்புப் பதக்கம் ஒன்றை குலேந்திரனுக்கு வழங்கிக் கௌரவித்தார்கள்.

– வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் –
(முதல்வர், யாழ்ப்பாணக் கல்லூரி)

அவர் தனது B.A. படிப்பினை இலங்கைப் பல்கலைக்கழகத்திலே பெற்றுக் கொண்டார், B.D., D.D ஆகிய பட்டங்களை கல்கத்தாவிலுள்ள செறம்பூர் பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

சமயங்கள் என்ற துறையில் உலகத்திலேயே மிகச் சிறந்த நிபுணராக அவர் கருதப்பட்டார். தமிழ், ஆங்கிலம், கிரேக்கம், எபிரேயம், லத்தீன், சமஸ்கிருதம் ஆகிய ஆறு மொழிகளிலே பாண்டித்தியம் பெற்று விளங்கியவர் குலேந்திரன்.

### எழில் தமிழாளர்

பேராயர் குலேந்திரன் தமிழ்மொழியின் மீதும், தமிழ் மக்கள் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவர் ஓர் எழில் தமிழாளர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சோ. இளமுருகனார், தவத்திரு. தனிநாயக அடிகள், பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோரின் மிக நெருங்கிய நண்பராவார். தவத்திரு. தனிநாயக அடிகள் இவருடைய உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

01-11-1924 இல் யாழ்ப்பாண வாலிபர் சங்கம் எனும் அரசியலமைப்பு உருவாகிய பொழுது அதன் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராகக் குலேந்திரன் விளங்கினார்.

மகாத்மா காந்தியை யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்தது இந்த அமைப்பே.

1958 இல் இனக் கலவரம் வெடித்த பொழுது மூதறிஞர் ராஜாஜிக்குக் கடிதமெழுதி, 'கல்கி' வார இதழில் இலங்கைப் பிரச்சினை குறித்துத் தலையங்கம் எழுதுவிக்கத் தூண்டினார்.

1974ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்துலகத் தமிழராய்ச்சி மாநாட்டிலே ஒன்பது தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் அமைத்த மூவர் கொண்ட நீதி விசாரணைக் குழுவினரிலே அவரும் ஒருவராக அமர்ந்து, அரசாங்கம் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கினார்.

பேரறிஞர் குலேந்திரன் மறைந்து விட்டார். ஆனால் அவர் தமது உள்ளத்தைப் பேணிய விதமும், உடலைப் பேணிய முறையும் நமக்கு எப்பொழுதும் ஒரு பாடமாக இருக்கும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூரில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
மடைந்தனர்.

ஆலங்கேணியைச் சேர்ந்த சுசிலா [வயது 22] என்ற பெண் படையினரால் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் திருக்குளம் மாத்தயாத் தோட்டம், இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

அச்சமயம் வெள்ளைக்குட்டி நாகலிங்கம், கணேசலிங்கம் துரைநாயகம், நற்குணம் செல்வராசா, செபஸ்ரியான் பயஸ் பதுமராஜா ஆகிய இளைஞர்களையும், ரவீந்திரன் ராணி என்ற பெண்ணையும் படையினர் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-5]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பியற்றிஸ் (கேளி) சுந்தரம்

திருமதி பியற்றிஸ் [கேளி] சுந்தரம் காலமானார். இவர் காமல், அஞ்சலா, கிறிஸ்ரி, காலஞ்சென்ற கிறிஸ்ரபெல், ஹாட்ஸ், அன்ரன், ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற சோமசுந்தரம், தம்பிராசா, றஞ்சிதமலர், கிருபானந்தன், நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [23-02-92] ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சரசாலை தெற்கிலுள்ள அன்ரனின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கச்சாய் விகோறியா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**அன்ரன் சேவியர் தம்பிராசா**

(19829)

## த. திருநாவுக்கரசு

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் உரும்பராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை திருநாவுக்கரசு 22-2-92 இல் சிவபதமடைந்துள்ளார். அன்னார் பவளத்தின் அன்புக் கணவரும், தம்பித்துரை [புத்தளம் பெருந்தோட்ட நிர்வாகி], மனோகௌரி [கோண்டாவில்], மனோகரன், நிர்மலாதேவி [லண்டன்], பாலசுப்பிரமணியம் [ஜேர்மனி], பத்மநாதன் [அமெரிக்கா], சந்திராதேவி [ஜேர்மனி], உதயகுமார் [லண்டன்] ஆகியவர்களின் அன்புத் தந்தையும், யோகலிங்கம் [இரட்டினம் வர்த்தக நிலையம், கோண்டாவில்], ரேணுகா, இரத்தினமாலா, பூபாலசிங்கம், நாகரஞ்சனி, புஸ்பநாதன் என்போரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-2-92 ஞாயிறு நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் இளங்காட்டு மயானத்திற்குக் கொண்டு செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**தி. மனோகரன்**

1 ஆம் ஒழுங்கை,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

[19828]

## நன்னித்தம்பி தங்கம்மா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கு கும்பப்பிள்ளையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய நன்னித்தம்பி தங்கம்மா காலமானார். அன்னார் காலஞ்சென்ற நன்னித்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நல்லம்மா, இளைப்பாறிய ஆசிரியர் கந்தையா [திருச்செந்தூர்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி, K. N. சுப்பிரமணியம் [பொறியியலாளர், ஆஸ்திரேலியா] ஆகியோரின் அன்புத் தாயாரும், நெல்லிநாதன் [பொன்னம்பலம்], தெய்வராணி [ஆஸ்திரேலியா] ஆகியோரின் அன்பு மாமியாரும், புஸ்பராஜா தயாபரி [கனடா], காயத்திரி [கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்], ஆஸ்திரேலியாவிலுள்ள மேகலா, பிருந்தா, சுரேஷ், கம்ஸலா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த நெல்லிநாதன் [பொன்னம்பலம்] அவர்களின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
நெல்லிநாதன்
[பொன்னம்பலம்]

கோப்பாய் தெற்கு,
[19830]

## கணபதிப்பிள்ளை இராமநாதன்

நெல்லியான் சுழிபுரம், கணபதிப்பிள்ளை இராமநாதன் [இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர், இலங்கை வங்கி முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர்] 21-02-92 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலம்சென்ற கணபதிப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் சரஸ்வதியின், அன்புக் கணவரும், காலம்சென்ற கதிர்காமநாதன், கலாரஞ்சிதம், ஜெகநாதன், விஜியநாதன், சுவேந்திரநாதன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலம்சென்ற தங்கராசா, இந்திரராசா, திருமதி அம்பிகாதேவி சத்தியமூர்த்தி, சிவராசா [வாகை], திருமதி ருக்குமணிதேவி அசோகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. இந்திரராசா
[ஆசிரியர் விக்ரோறியாக் கல்லூரி]

[19831]

## உள்ளூராட்சி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கப்படுவதால், நிர்வாக மாற்றத்தைச் செய்வதற்கான வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சி சபைகளின் மின்சாரப் பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்களையும், சொத்துக்களையும் மாற்றும் திட்டத்தின் கீழ் —

ஊழியர்கள் அவரவர்களின் தராதரங்களுக்கு ஏற்பவும், தற்போது பெறும் சம்பளத் திட்டத்தின் அடிப்படையிலும் மின்சார சபையில் நியமனம் பெறுவர் என்று தெரிவிக்கப்பட்டது. [அ-5]

## தமிழகத்தில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
ஸ்ரீலங்கா திரும்புவதற்குச் சம்மதம் தெரிவித்திருந்தவர்கள் கூட இப்போது அங்கு செல்ல மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசு ஈழத் தமிழர் அகதிகளைத் திரும்ப அழைப்பதில் திடீரெனத் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது. அதன் காரணமாக மன்னாருக்கு அகதிகளை அனுப்பும் நடவடிக்கை மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்டு நேற்றே இராமேஸ்வரத்திலிருந்து கப்பல் புறப்பட்டது. முதலில் இம்மாதம் 16 ஆம் திகதியென்றும் பின்னர் 18 ஆம் திகதி, 20 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டு நேற்றே அது புறப்பட்டது.

இம்மாத ஆரம்பத்தில் பாரிஸில் நடந்த இலங்கைக்கு உதவும் நாடுகளின் மாநாட்டில் நிதி உதவி கிடைத்ததைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது குறித்து இந்தியத் தரப்பில் அதிர்ச்சியும் அதிருப்தியும் ஏற்பட்டுள்ளது— என்று சென்னையில் உள்ள பி. பி. சி செய்தியாளர் திரு. சாம் ராஜப்பா தெரிவித்தார். [அ-10-5]

## சிங்கள..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்டது. அதனால் வடபகுதி மாணவர்கள் அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கூடியகால அவகாசத்தைப் பெற்று, தனிச் சலுகையைப் பெற்றுள்ளார்கள்.

ஆகையால் 1991 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளையும் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்டில் நடத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகளுடன் ஒப்பிடுவது நியாயமற்றது,

எனவே இவ்வாறு மீண்டும் ஒரு நிலை ஏற்பட அரசாங்கம் இடமளிக்கக் கூடாது— என்றார்.

மாணவர்களுக்கு எந்தவித அநீதியும் இழைக்கப்படமாட்டாது என்று கல்விச் சேவைகள் அமைச்சர் சுனேத்திரா ரணசிங்க உறுதி அளித்தார்.

## வன்செயல்கள்..

[2ஆம் பக்கத் தொடர்ச்சி]
அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலம் நீடிப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணை நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரேரணையை சமர்ப்பித்துப் பேசுகையில், அமைச்சர் வின்சென்ட் பெரேரா மேற்கண்டவாறு சொன்னார்.

மாத்தறை மற்றும் கரந்தெனிய பகுதிகளில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கிளர்ச்சிக்காரர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். தெற்கே புதிய அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதையே இச் சம்பவங்கள் காட்டுகின்றன.

அமைச்சர் மேலும் இவ்வாறு சொன்னார். [எ-த]

# வேலை நிறுத்தத்தில் வங்கி ஊழியர் குதிக்கலாம்

கொழும்பு, பெப். 23

அரச வங்கிகள் குறித்து பிரதமர் வெளியிட்ட தகவல்கள், வங்கி ஊழியர்களின் அச்சம் போன்ற இன்றைய நிலைமைகளினால் ஊழியர்கள் வேலை நிறுத்தம் ஒன்றில் குதிக்கலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய இரண்டிலும் சுமார் 22 ஆயிரம் ஊழியர்கள் கடமை புரிகின்றனர் என்றும். —

இவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினால், வங்கிகள் செயலிழந்து, அதனால் அபிவிருத்தி நடவடிக்கைகள் முடங்கி விடலாம் என்று அரசு அஞ்சுகிறது என்றும் பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேசமயம் —

பிரதமர் தெரிவித்த தகவல்கள் குறித்து வங்கிச் சேவை தொழிற்சங்கங்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. அரசின் தகவல் பொய்யானது என்றும், வங்கிகளைத் தனியார் மயப்படுத்துவதற்கு முன்னோடியாகவே இத்தகைய பொய்களை அரசு கட்டவிழ்த்து விட்டியிருப்பதாகவும் தொழிற்சங்கங்கள் கூறுகின்றன. (ஒ-10)

## கழிவுப்-....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)
கூடியதான கொள்கலன்கள், போத்தல்கள் என்பவற்றில் வரும் பொருள்களை வாங்குவோம்.

★ கடைக்கு பொருள்களை வாங்கப் போகும் போது எமது சொந்தப் பைகளை எடுத்துச் செல்வோம்.

★ தேவைக்கு அதிகமாக வீட்டிலிருக்கும் ரின்கள், கண்ணாடிப்போத்தல்கள் என்பனவற்றை விற்றுவிடுவோம்.

★ பிளாத்திக் பைகளை உபயோகிப்பதை கூடுமான வரை தவிர்ப்போம்.

★ எந்த ஒரு பொருளையும் கண்டபடி வீசியெறியாது ஓரிடத்தில் சேர்த்து வைப்போம். (பிறிதொரு சந்தர்ப்பத்தில் இவற்றில் சில எங்களுக்கே தேவைப்படலாம்.)

★ எந்த ஒரு பொருளையும், உபகரணத்தையும் கையாள முன்னர் அதனை உபயோகிப்பதன் மூலம் சூழல் மாசுபடுத்தப்பட மாட்டாது என்பதனை உறுதி செய்து கொள்வோம்.

இவற்றைச் செய்வதன் மூலம் செலவீனங்களையும் கட்டுப்படுத்தலாம். அத்துடன் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க நாம் ஆற்றும் சிறுபங்காகவும் இவை அமையும்.

நாம் இந்தப் பூமியை எமது மூதாதையரிடமிருந்து முதுசமாகப் பெறவில்லை; எமது பிள்ளைகளிடமிருந்து கடனாகப் பெற்றிருக்கிறோம் என்ற நினைப்புடன் செயற்படுவோமாக. ★

## நினைவுக் கூட்டம்

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் செல்வி க. சரவணமுத்துவின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## பிரதமரின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கடன் பெற்று மீளச் செலுத்தாதோர் பட்டியலில் ஐ. தே. க. முக்கியஸ்தர்களான முன்னாள் ஜனாதிபதியின் உறவினர்கள். அமைச்சர்களின் உறவினர்கள், எம். பியும், சட்டத்தரணியுமான கே. என். சொக்ஸியின் சகோதரர் ஆகியோரும் அடங்குவர் — என்றும் அந்தச் செய்தியில் விமர்சிக்கப்பட்டது. [ஒ-10]

# மரண அறிவித்தல்கள்

## மாசிலாமணி கந்தையா

மாசிலாமணி கந்தையா [இளைப்பாறிய இலிகிதர், கல்வித் திணைக்களம்] 22-2-92 அன்று காலமானார். அன்னார் கந்தையா - சரஸ்வதியம்மாள் ஆகியோரின் அன்பு மகனும், மணிமேகலாதேவியின் அன்புக் கணவரும், ஷாமினி [யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம்], சுதர்சன் [யாழ். இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி, அரசலிங்கம் [ஆஸ்திரேலியா], கணேகேஸ் [கொழும்பு] ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை 3 மணியளவில் கலாசாலை வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகலல் :
**மா. சுதர்சன்**
[மகன்]

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
[19832]

## வேதையா குருக்கள் கந்தையா குருக்கள்

வேதாரணிய குருக்கள் பரம்பரையைச் சேர்ந்த வேதையா குருக்கள் கந்தையா குருக்கள் அவர்கள் 22-2-92 அன்று சிவபதப்பேறு எய்தினார்.

இவர் கரவெட்டி கிழக்கு பத்திரகாளி அம்மன் கோவில் பிரதம குருவும் ஆவார். குரும்பசிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட க. சோமசுந்தரம் அதிபர் அவர்களின் தந்தையும், நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் பிரதம குரு தி. சோமஸ்கந்தராசா குருக்களின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23-02-92 இன்று பத்திரகாளி கோவிலடியில் முற்பகல் 11 மணி அளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மகன், பேரப்பிள்ளைகள்.**

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
[19833]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org